**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure )**
**--**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | CC. No.118/25 | அரசுத்தரப்பு சாட்சி | P.W.3 |
| பெயர் | பாக்கியம் | கிராமம் | |
| தந்தை / கணவர் பெயர் | பிச்சைமுத்து | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed by Thiru.S.Bharanitharan, Grade –II Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 25.03.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1- Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.
Aadhar card of the Witness verified.

1,3 எதிரிகள் ஆஜர். 2வது எதிரி ஆஜர் இல்லை. எதிரி ஆஜராகாததை மன்னிக்க மனு கொடுக்கப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் புதுக்கோட்டை மாவட்டம் கைக்குறிச்சயில் குடியிருந்து வருகிறேன். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு நாங்கள் எண்ணெய் கடை பக்கத்தில் கட்டிடத்தை உடைத்த கழிவுகளை அள்ளும் சித்தாள் வேலை செய்தோம். மாலை 3.00 இருக்கும். பில்லர் கட்டை ஒன்று என்னுடன் வேலை பார்த்த கோவிந்தம்மாள் தலையில் விழுந்தது. ஆஜர் எதிரிகள் தான் அவரை காரில் கொண்டு சென்றார்கள். காயம்பட்டவரின் போனை எடுத்து அவருடைய தம்பி தண்டாயுதபாணிக்கு தகவல் சொன்னேன். சம்பவ இடத்திலேயே கோவிந்தம்மாளுக்கு அதிக ரத்தம் போய் இருந்தது. அவரை புதுக்கோட்டை மருத்துவமனையில சேர்த்துவிட்டு மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவமனையில சிகிச்சைக்கு சேர்த்தார்கள். அவரது நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருந்ததாக சொன்னார்கள். 2 நாட்கள் கழித்து கோவிந்தம்மாள் இறந்துவிட்டார். ஆஜர் எதிரிகள் தான் எங்களையும் கோவிந்தம்மாளையும்

வேலைக்கு அழைத்து சென்றவர்கள் ஆவார்கள். ஆஜர் எதிரிகள் கட்டையை தோண்டியதன் காரணமாகவே கட்டை கோவிந்தம்மாள் மீது விழுந்து அவருக்கு காயம் ஏற்பட்டது. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை –** இல்லை.

(கால அவகாசம் வழங்கப்பட்டும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படவில்லை.)

Sd/– பாக்கியம்

| |
|---|
| சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.<br>Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,<br>தலைமை நீதித்துறை நடுவர்,<br>புதுக்கோட்டை. |

**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure )**
**--**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | CC. No.118/25 | அரசுத்தரப்பு சாட்சி | P.W.4 |
| பெயர் | அண்ணாமலை | கிராமம் | |
| தந்தை / கணவர் பெயர் | | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed by Thiru.S.Bharanitharan, Grade –II Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 25.03.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1– Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.
Aadhar card of the Witness verified.

1,3 எதிரிகள் ஆஜர். 2வது எதிரி ஆஜர் இல்லை. எதிரி ஆஜராகாததை மன்னிக்க மனு கொடுக்கப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>**முதல் விசாரணை**</u>

நான் புதுக்கோட்டை மாவட்டம் திருவள்ளுவர் நகர் அருகில் வசித்து வருகிறேன். நான் தட்சிணா மூர்த்த மார்க்கெட்டில் ஆயில்மில் கடை வைத்து நடத்தி வருகிறேன். 12.02.2023 தேதியில் எங்கள் கடைக்கு அருகே முத்துக்குமார் அன் கோ பெயிண்டிங் கடை குடோனாக இருந்தது. அது பழைய கடை என்பதால் அதை புதுப்பிப்பதற்காக இடித்தார்கள். அங்கே வேலை பார்த்துக்கொண்டிருந்த ஒரு பெண்ணின் மீது சிமெண்ட் கட்டை விழுந்தது. அந்த அம்மாவுக்கு அடிப்பட்டு ரத்தம் வந்தது. அதன்பிறகு அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அந்த சிமெண்ட் கடையின் ஓனர் முத்துக்குமார் ஆவார். அந்த கட்டிடம் இடிப்பதற்கான பணி செய்த கான்ட்ராக்ட் எடுத்தவர்கள் தான் ஆஜர் எதிரிகள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். விபத்திற்கு யார் காரணம் என்று எனக்கு தெரியாது.

**<u>குறுக்கு விசாரணை –</u>** இல்லை.

**(கால அவகாசம் வழங்கப்பட்டும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படவில்லை.)**

Sd/– அண்ணாமலை

| |
|---|
| சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.<br>Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,<br>தலைமை நீதித்துறை நடுவர்,<br>புதுக்கோட்டை. |

**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure )**
**--**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | CC. No.118/25 | அரசுத்தரப்பு சாட்சி | P.W.5 |
| பெயர் | சீனிவாசன் | கிராமம் | |
| தந்தை / கணவர் பெயர் | வெங்கட்ராமன் | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed by Thiru.S.Bharanitharan, Grade -II Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 25.03.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.
Aadhar card of the Witness verified.

1,3 எதிரிகள் ஆஜர். 2வது எதிரி ஆஜர் இல்லை. எதிரி ஆஜராகாததை மன்னிக்க மனு கொடுக்கப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் புதுக்கோட்டை மாவட்டம் தட்சிணாமூர்த்தி மார்க்கெட்டில் பேன்ஸி ஸ்டோர் வைத்து நடத்தி வருகிறேன். முத்துக்குமார் அன் கோ பெயிண்டிங் கடை எனது கடையில் இருந்து 2வது கடை ஆகும். அது பழைய கட்டிடம் என்பதால் அந்த பெயிண்ட் கடையை இடித்து கொண்டிருந்தார்கள். மாலை 3.10 மணியளவில் நான் கடையில் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது அய்யோ அம்மா என்று சத்தம் கேட்டது. அங்கு வந்து பார்த்தபோது கோவிந்தம்மாள் என்பவர் வேலை பார்த்துக்கொண்டிருந்தார். அவர் தலையின் மீது சிமெண்ட் தூண் விழுந்து அவருக்கு ரத்த காயம் ஏற்பட்டது. கட்டிடத்தை இடிக்கும் காண்ட்ராக்ட் காரர்களின் காரில் ஏற்றி அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். ஆஜர் எதிரிகள் தான் அவர்கள். எந்த வித பாதுகாப்பும் இல்லாமல் தூண்களுக்கு அருகில் இடிந்த மண் துகள்களை எடுக்கும்போது தூண் விழுந்துவிட்டது. அதனால்தான் இந்த விபத்து ஏற்பட்டது. இந்த வழக்கு

சம்மந்தமாக போலிசார் என்னை விசாாத்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை –</u>** இல்லை.

(கால அவகாசம் வழங்கப்பட்டும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படவில்லை.)

Sd/– சீனிவாசன்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.